Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Tenkasi

Calendar of cases tried by the Judicial Magistrate of Tenkasi.

| Date of offence | Date of Report of complaint | Remand or surrender of accused | Release on bail | Commencement of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| 12.09.2014 | 12.09.14 | 13.09.2014 | 17.09.2014 | 15.04.26 | 16.07.26 | 01.08.2026 |
| C.S.D. 20.09.14 | Explanation of Delay and Remarks: NIL | | | | | |
| C.S.F.D. 22.4.19 | | | | | | |
| D.Cogni.22.04.19 | | | | | | |
| A.P.D. 15.04.26 | | | | | | |

Judgment in CC 189/2019 on the file of the Judicial Magistrate of Tenkasi.

Complainant: The Sub Inspector of Police, Tenkasi P.S in Cr.No.355/2014

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| Alaguraja | 19/14 | Karuppaiah |

| Caste or Religion | Calling | Residence | Police Station |
|---|---|---|---|
| Hindu | Coolie | Ilangi | Tenkasi |

**Offence** : Section 147, 341, 294(b), 323, 506(2) IPC

**Sentence** : Accused is found not guilty Sec.147, 341, 294(b), 323, 506(2) IPC and the accused are acquitted Sec.248(1) of Crpc.,

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.08.01 15:51:27 +0530

Judicial Magistrate,
Tenkasi.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை: திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 1 ம் நாள் சனிக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 189/2019
CNR.No.TNTS02-001009-2019

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
தென்காசி கா.நி.கு.எண் 355/2014 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

அழகுராஜா, 19/14,
த.பெ.கருப்பையா,
காலனித்தெரு,
இலஞ்சி ... எதிரி

இவ்வழக்கு 22.04.2019 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சாமி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## தீர்ப்புரை

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு** –

இவ்வழக்கின் சாட்சிகள்.1,2,3 ஆகியோர்கள் தென்காசி ICI அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் +1 படித்து வருகிறார்கள். எதிரியும் அதே பள்ளியில் படித்து வருகிறார். 12.09.2014 ம் தேதி மாலை 17.00 மணிக்கு சாட்சி.1, சாட்சிகள்.2,3 டன் தென்காசி புதிய பேருந்து நிலையத்திற்கு உட்புறமுள்ள டவுண் பஸ்கள் நிற்குமிடத்தில் நின்று பேசிக்கொண்டிருந்த போது எதிரி மற்றும் இளஞ்சிறார்கள் 7 பேர்களும் அங்கு வந்து சட்ட விரோதமாக ஒன்று கூடி சாட்சிகளை வழிமறித்து ஏலே தேவிடியா மகனே எங்க ஜாதியை பற்றி எப்படில பேசலாம் என்று மிகவும் அவதூறான வார்த்தைகளால் பொதுயிடத்தில் வைத்து ஏசி அவமானப்படுத்தியும், 1 வது சாட்சியை, எதிரியும் மற்றும் இளஞ்சிறார்கள் 7 பேரும் கையால் அடித்து உடம்பில் சாதாரண வலிக்காயத்தை ஏற்படுத்தியும், இனிமேல் இங்க உங்களை பார்த்தால் கைய கால ஒடித்துக் கொன்னு புடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே, எதிரி இதச பிரிவுகள் 147,

341, 294(பி), 323, 506(2)ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது தென்காசி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர் குற்றத்தினை மறுத்துள்ளார். இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) கு.வி.மு.ச.வின் படி எதிரி மீது இதச பிரிவுகள் 147, 341, 294(பி), 323, 506(2)ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர் தான் குற்றவாளி இல்லை என்று மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில், எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –**

கடந்த 12.09.2014ம் தேதி 19.00 மணிக்கு மாரியப்பன் சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது சதிஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.355/2014, இதச பிரிவுகள் 147, 341, 294(b), 323, 506(2)ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், அந்த புகார் மனு அ.சா.ஆ.2 மற்றும் முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.3 என்றும், பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 12.09.2014ம் தேதி 20.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் முருகன் மற்றும் இளவரசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர், அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், பின்னர் சாட்சிகள் சதிஸ், சக்தி முப்பிடாதி, சரத் பார்வை மகஜர் சாட்சிகள் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர்

மாரியப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் 12.09.2014ம் தேதி கைது செய்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் புரோஸ்கான் என்பவரை விசாரித்து காயச்சான்று அ.சா.ஆ.6 பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்பு புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 147, 341, 294(b), 323, 506(2)ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான சங்கதிகளை எதிரியிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரி பொய்ச்சாட்சி என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா ? என்று வினவிய போது, எதிரி சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது இதச பிரிவுகள் 147, 341, 294(பி), 323, 506(2)ன் கீழ் உள்ள குற்றச்சாட்டானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

<u>8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

எதிரி, அ.சா.1யை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டானது அ.சா.1 முதல் அ.சா.4 வரையுள்ள சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**9. எதிரி தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார் –**

அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரிக்கு எதிரானக் குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**10. தீர்வு –**

இவ்வழக்கின் சாட்சிகள்.1,2,3 ஆகியோர்கள் தென்காசி ICI அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் +1 படித்து வருகிறார்கள். எதிரியும் அதே பள்ளியில் படித்து வருகிறார். 12.09.2014 ம் தேதி மாலை 17.00 மணிக்கு சாட்சி.1, சாட்சிகள்.2,3 டன் தென்காசி புதிய பேருந்து நிலையத்திற்கு உட்புறமுள்ள டவுண் பஸ்கள் நிற்குமிடத்தில் நின்று பேசிக்கொண்டிருந்த போது எதிரி மற்றும் இளஞ்சிறார்கள் 7 பேர்களும் அங்கு வந்து சட்ட விரோதமாக ஒன்று கூடி சாட்சிகளை வழிமறித்து ஏலே தேவிடியா மகனே எங்க ஜாதியை பற்றி எப்படில பேசலாம் என்று மிகவும் அவதூறான வார்த்தைகளால் பொதுயிடத்தில் வைத்து ஏசி அவமானப்படுத்தியும், 1 வது சாட்சியை, எதிரியும் மற்றும் இளஞ்சிறார்கள் 7 பேரும் கையால் அடித்து உடம்பில் சாதாரண வலிக்காயத்தை ஏற்படுத்தியும், இனிமேல் இங்க உங்களை பார்த்தால் கைய கால ஒடித்துக் கொன்னு புடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே, போலிசாரிடம் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்ததாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. எதிரியின் மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கும் போது, அ.சா.1 சதீஷ், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை சம்பவத்தன்று தான் பார்த்துள்ளதாகவும், அதற்கு முன்பு தனக்கு தெரியாது என்றும், சாட்சிகள் சக்திமுப்பிடாதி, சரத் ஆகியோர்களை சம்பவத்தன்று தனக்கு தெரியும் என்றும், தான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், கடந்த 12 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் தனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும், தங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்துக்

கொண்டதாகவும், தான் தடுமாறி கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 தன்னுடையதுதான் என்றும், புகார் மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று தனக்கு தெரியாது என்றும், எதிரி தன்னை அசிங்கமாக பேசவில்லை, அடித்துக் காயப்படுத்தவில்லை, கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றும், தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளதாகவும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 சக்திமுப்பிடாதி, தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், பள்ளியில் தன்னுடன் ஒன்றாக படித்தவர் என்றும், அ.சா.1 ஐ தெரியும், சாட்சி சரத் என்பவரை தெரியும், வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.3 சிவசங்கர், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், சதிஷ், சக்திமுப்புடாதி ஆகியோர்களை தெரியும் என்றும், சிறுவயதில் தங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றும், தற்போது ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை வைத்துப் பார்க்கும் போது, எதிரி, புகார்தாரரை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக முன்னிலைப்படுத்தப்பட்ட அரசு தரப்பு வழக்கு வெகுவாக பாதிக்கிறது. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட போதிலும் அரசு தரப்புக்கு ஆதரவாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

14. இந்த வழக்கில், அ.சா.4 தனது சாட்சியத்தில், புகார்தாரரிடம் புகார் மனு பெறப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது ஆகியவற்றை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் இருப்பதால் அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரி குற்ற செயல்களில் ஈடுபட்டார் என்றோ அல்லது எதிரிக்கு எதிரான அசிங்கமாக பேசி,

அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று முடிவுக்கு வர முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவுகள் 147, 341, 294(பி), 323, 506(2)ன் கீழ் உள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டுக்கு அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி இல்லை என்று கண்டறிகிறது.

16. முடிவில், எதிரி இதச பிரிவுகள் 147, 341, 294(பி), 323, 506(2)ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. இவ்வழக்கின் எதிரி கடந்த 13.09.2014ம் தேதியன்று கைது செய்யப்பட்டு, கடந்த 17.09.2014ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

**18. வழக்குச் சொத்து** –

இந்த வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 1ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.08.01 15:51:38 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | சதீஷ் |
| அ.சா.2 | சக்திமுப்பிடாதி |
| அ.சா.3 | சிவசங்கர் |
| அ.சா.4 | திருமதி.தமிழ்செல்வி, சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் மனுவிலுள்ள அ.சா.1ன் சாட்சி கையொப்பம் | 23.06.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | புகார் மனு | 16.07.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.4 | அசல் |
| 3 | முதல் தகவல் அறிக்கை | 16.07.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.4 | அசல் |
| 4 | பார்வை மகஜர் | 16.07.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.4 | அசல் |
| 5 | மாதிரி வரைபடம் | 16.07.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.4 | அசல் |
| 6 | காயச்சான்று | 16.07.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.4 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள் –** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் –** இல்லை.

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.08.01 15:51:46 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**குறிப்பு :–**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.